## வட மாகாண சபை – 2020 ஆம் ஆண்டு

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வட மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(3) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2022 பெப்ரவரி 08 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 பெப்ரவரி 15 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியொன்று 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) பிரிவின் பிராகரம் மாகாண சபையில் சமர்ப்பிப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வட மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2020 சனவரி 01 இல் உள்ளவாறான நடைமுறையல்லா சொத்துக்களின் மீதி ரூபா558,375,684 ஆல் குறைத்து நிதி நிலைமைக் கூற்றில் அத் திகதியிலுள்ளவாறான அச் சொத்துக்களின் மீதியாக காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு தேவையான வசதிகள் சிகாஸ் கணினிக் கட்டமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சரியான கணக்கு வைத்தல்களுக்கு தேவையான நடைமுறைகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருடன் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். |
| (ii) | நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்களை புனரமைத்து மேம்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா462,245,370 நடைமுறையல்லா சொத்துக்கள் கூற்றின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்காததால், நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு தேவையான வசதிகள் சிகாஸ் கணினிக் கட்டமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சரியான கணக்கு வைத்தல்களுக்கு தேவையான நடைமுறைகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருடன் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். |
| (iii) | உள்ளூராட்சி திணைக்களத்திற்குரிய | எதிர்வரும் வருடத்தின் கணக்குகளில் இதனை | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா97.60 மில்லியன் பெறுமதியான 1.337 ஹெக்டெயர் பரப்பளவான 06 காணித்துண்டுகள் மற்றும் ரூபா 11.13 மில்லியன் பெறுமதியான 08 வாகனங்கள் ACA-6 ஆம் இலக்க நடைமுறையல்லா சொத்துக்கள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . இதனால் ரூபா 108.73 மில்லியன் கூட்டுமொத்தமான நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (iv) | ரூபா 26,242,138 கூட்டுமொத்தமான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . பின்னர் அப் பொறுப்புக்கள் 05/2020 ஆம் இலக்க அரச கணக்கீட்டு வழிகாட்டலின் 4.11 ஆம் பந்திக்கு முரணாக தொடர்ந்துவரும் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | கணக்காண்டின் பின்னர் சில கொடுப்பனவுகளை பொறுப்புகளாக கணக்கு வைக்க முடியாதிருந்தது. | அனைத்துப் பொறுப்புகளும் உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | 03 மாகாண திணைக்களங்களுக்குரிய 13 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பில் காப்புறுதி நிறுவனத்தால் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருக்காத ரூபா10,037,053 நட்டம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு (i) மற்றும் (ii) இல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நட்டம் மற்றும் சேதம் நிதிக்கூற்றுக்களில் உரிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கணக்காய்விற்கான சான்றின்மை**<br>------------------------------ | | |
| | வழங்குநரிடமிருந்தோ அல்லது ஏனைய தரப்பினர்களிடமிருந்தோ உறுதிப்படுத்தல் எதுவும் பெற்றுக்கொள்ளப்படாமல் மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தால் ரூபா10,811,316 கூட்டுமொத்தமான உணவுப் பொருட்களிற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சான்றுபடுத்தும் சான்றுகள் போதுமானவையா என்பது தொடர்பில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் கருத்திற்கொள்ள வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கு மாகாண திறைசேரி உள்ளடங்கிய உரிய நிறுவனங்களின் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வட மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- வேண்டுமென்ற விட்டுவிடுதல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான விட்டுவிடுதல்கள் மோசடியொன்று ஏற்படுவதற்கான காரணமாக அமையும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்படுத்துவேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 410 – நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், காணிகள், மின்சக்தி, வீடமைப்பு மற்றும் கட்டுமானம், சுற்றுலா, உள்ளூராட்சி அமைச்சு

மீளாய்வாண்டின் போது மாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு காணிகளின் மீட்டல் அபிவிருத்தி நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாகவும், இந்த இலக்குகளை இடைந்துகொள்வதற்கான குறிகாட்டிகளாக சேதனப் பசளை உற்பத்திக்கூடம் மீளமைப்பு எண்ணிக்கை, உக்கக்கூடிய கழிவுகள் சேகரிக்கப்படும் அளவு, உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளையின் கிலோ கிராம்களின் அளவு போன்றவற்றை தீர்மானித்து அவற்றை அடைந்துக்கொள்ளும் மட்டம் 75 சதவீதம் முதல் 100 சதவீதமாக காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் ரூபா3,167,940 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட உமையாள்புரம் கூட்டுப்பசளையாக்கல் திட்ட நிலையம் 03 ஆண்டுகளாக விளைவற்றிருந்தது. | இந்த நிலையத்தினை ஆக்கபூர்வமாக பயன்படுத்த தேவையான முன்மொழிவுகள் மாவட்டச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முறையற்ற பாவனைக்கு உட்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களையும் தாமதிக்காது பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 17 உள்ளூராட்சி சபைகளை கொண்டுள்ள யாழ்ப்பாண மாவட்டத்திற்கு குப்பைகளை அகற்றுவதற்காக இதுவரையிலும் பொருத்தமான நடைமுறைமையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கழிவுகளை அகற்றுவதற்காக இடமொன்று கண்டறியப்பட்டுள்ளதுடன், நிதியேற்பாடு கிடைத்த பின்னர் இதனை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. | இவ்வாறான செயற்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உள்ளூராட்சி சபைகளில் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டுவரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் செயற்படாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அந்த பணிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்காக பின்தொடர்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மாகாணத்தில் நிறுவப்பட்ட 34 உள்ளூராட்சி சபைகளில் 27 சபைகளில் குப்பைகளை பயன்படுத்தி சேதனப் பசளையினை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலவிடுவதற்குப் போதுமான அளவான பணம் கிடைத்தவுடன், இந்த பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இவ்வாறான பணிகளுக்காக முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும். |

## 1.5.2 தலைப்பு 412 – கல்வி, கலாச்சார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாகாண நிதி ஒழுங்குவிதி 420.1 (viii) மூலம் விதிக்கப்பட்ட குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படாமல் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை கட்டிட வாடகையாக ரூபா 1,260,000 தொகை மாகாண கல்வி அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பிற்குரழய ஆளுநரால் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | மாகாண நிதி விதிகளுக்கமைய முன்னுரிமையளித்து செயற்பட வேண்டும். |

**1.5.3 தலைப்பு 420 – பிரதம செயலாளர்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) மாகாண நிதி ஒழுங்குவிதி 219 இன் பிரகாரம், செயல்நிமித்த உப கட்டுநிதிகள் உரிய நோக்கம் நிறைவடைந்ததும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 250 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா12,735,514 செயல்நிமித்த உப கட்டுநிதிகள் உரிய நோக்கம் நிறைவடைந்தது தீர்ப்பனவு செய்யப்பட்ட காலப்பகுதி 07 நாட்கள் தொடக்கம் 322 நாட்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | கொவிட் -19 தொற்றுநோய் நிலைமை காரணமாக இந்த தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. | முற்பணங்களை தீர்க்கும் போது ஏற்படும் தாமதங்களுக்கு எதிராக துரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், வட மாகாண சபையின் கீழுள்ள சில திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் அவற்றின் பதவியணியினரிற்கான செயலாற்றல் மதிப்பீட்டு அறிக்கைகள் | இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | உரிய சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பேணப்பட்டிருக்காததுடன் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திறன் இடைவெளிகளை (Competency Gaps) இனங்காணும் பொருட்டு மனித அபிவிருத்தி திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2008 யூன் 30 முதல் அமுலுக்கு வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட விசேட தர பதவிகளான மாகாண பொது நிர்வாக கூட்டுறவு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகிய பதவிகள் மற்றும் 2013 சனவரி 01 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட விசேட தர பதவியான பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) போன்ற பதவிகளுக்காக விசேட தரங்களை | இதற்கு தேவையான அறிவுரைகளுக்காக வரிசை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இவ்வாறான சிக்கல்கள் தாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டிருக்காத மூன்று உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களிற்கு விசேட தரத்திற்குரிய சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டதால் அத் தரங்களிற்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2020 திசெம்பர் வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா2,192,191 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது மாகாண அபிவிருத்திக்காக ரூபா 690,149,699 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக செலவிடப்பட்ட மொத்த பொது செயற்பாட்டுக் கிரயம் ரூபா28,710,619,161 ஆக காணப்பட்டது. எனவே மாகாண அபிவிருத்திக்காக செலலவிடப்பட்ட தொகை மொத்த செலவினத்தில் 2.4 சதவீதத்தை விடக் குறைவான தொகையாக காணப்பட்டது. | ஒட்டுமொத்த மூலதனச் செலவினத்தில சுமார் 1/3 அளவானது மாகாண அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்தது. | மீண்டெழும் செலவினத்தை இயலுமான அளவில் கட்டுப்படுத்தி மாகாண அபிவிருத்திக்காக கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றலை கருத்தில் கொள்ளும் போது, வடக்கு வீதி இணைப்பு செயல்திட்டத்தின் (NRCP) 76 சதவீதமான ரூபா 63 மில்லியன் தொகையும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டத்தின் (JKWSSP) 96 சதவீதமான ரூபா 81 மில்லியன் தொகையும் மீளாய்வாண்டின் போது மாகாண சபையால் செலவிடப்பட்டிருக்கவில்லை. | கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை போன்றே, பணிகளை நிறைவேற்றுவதற்கு போதிய காலம் இல்லாதிருந்தமை இவ்வாறு நிதியேற்பாடு எஞ்சியமை தொடர்பில் தாக்கமளித்திருந்தது. | முன்னுரிமைகளை இனங்கண்டு பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஊ) | 8714 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 1934 வெற்றிடங்களும் 106 மிகைகளும் காணப்பட்டது. | வருடாந்த இடமாற்றத்தின் கீழ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பதவியணியினரின் மீளாய்வின் போது மிகை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். | பதவி வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் மிகைப் பதவியணியை ஆட்சேர்ப்பு செய்தல் ஆக்கபூர்வமானதாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | மாகாண உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மீளாய்வாண்டின் போது வட மாகாண சபையின் கீழ் உள்ள நிறுவனங்களிற்கு | அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு தாமதமின்றி பதில் வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட 106 கணக்காய்வு ஐயவினாக்களில் 53 இற்கான பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் அலுவலக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா114,715,921 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | தாமதமின்றி உரித்து மாற்றப்பட வேண்டும். |

**1.5.4 தலைப்பு 421 – மாகாண திறைசேரி**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 01 ஆம் திகதிய PF/AP/02/2020 ஆம் இலக்க வட மாகாண நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மாகாண திறைசேரியினால் தயாரிக்கப்பட வேண்டிய ACA 2(a) , ACA 2(a)(i), ACA 2 (a)(ii), ACA 2 (a)(iii) மற்றும் ACA 2 (a)(vi) ஆகிய மாதிரி படிவங்கள் எதுவும் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் கணக்காண்டினுள் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 மாகாண திணைக்களங்களில் கடமையாற்றிய பின்னர் வட மாகாண சபைக்கு வெளியேயான அரச நிறுவனங்களிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள 55 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா5,328,657 கடன் மீதி முன்னைய ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது. | இந்த கடன் மீதிகளை அறவிடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. | கடன் மீதிகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 செலவின விடயங்களில் சேமிக்கப்பட்ட நிதியேற்பாடுகளை விஞ்சி ரூபா 72,925,424 பொறுப்புக்களிற்காக கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. | எதிர்பாரத்த வருமானங்கள் கிடைக்காமையால் போதியளவான நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்ய முடியாதிருந்தது. | முன்னுரிமைகளை இனங்கண்டு பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 05 வருமானக் குறியீடுகளிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் பெற்றுக்கொள்ளப்படாத வருமானம் ரூபா 250,278,715 ஆக காணப்பட்டது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 36 சதவீதமாக காணப்பட்டது.. எனினும் 03 வருமானக் குறியீடுகளிற்காக மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சி ரூபா 13,114,271 தொகை பெறப்பட்டிருந்ததுடன் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 82 சதவீத அதிகரிப்பாக காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரியான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) 06 மாகாண திணைக்களங்களில் கடமையாற்றிய பின்னர் கடமைக்கு சமூகமளித்திருக்காத, இறந்த, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் பதவி இடைநிறுத்தப்பட்ட 39 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 2,781,384 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தின் நிலுவைப் பணத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதிகளை தாமதமின்றி அறவிட வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 425 – மாகாண வருமானத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாகாண சபையால் 02 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா82,046,665 முத்திரை கட்டண வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட முத்திரை கட்டணங்களின் உரிமை எந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு என்பதை மாகாண சபை உறுதிப்படுத்த தவறியதாலும், அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததாலும் சேகரிக்கப்பட்ட அனைத்து வருமானமும் மாகாண சபைக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டண உரித்துடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் இனங்காண முடியாமையால் அந்த வருமானங்களை செலவு வைக்க நேர்ந்துள்ளது. | உள்ளூராட்சி நிறுவனங்களை திட்டவட்டமான இனங்காணக்கூடிய வகையிலான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.6 தலைப்பு 450 – சுகாதாரத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண நிதி ஒழுங்குவிதி 76 இன் பிரகாரம், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்களில் நட்டங்கள் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் மாகாண சுகாதார திணைக்களத்தினால் நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் பதிவேட்டினை பராமரிப்பதற்காக தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | மாகாண நிதி விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது 10 உத்தியோகத்தர்களுக்கு ரூபா1,643,018 தொகை மேலதிக நேர படியாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த பணத்தின் ஒரு பகுதி அறவிடப்பட்டதுடன், எஞ்சிய பணம் அறவிடப்பட்டவாறு காணப்படுகின்றது. | நிலுவை மீதிகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (இ) | பூநகரி சுகாதார வைத்திய அதிகாரியினால் 2018 ஏப்ரல் மாதத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான ரூபா 9,000,000 பெறுமதியான கெப் வாகனமொன்று சொந்த தேவைக்காக பயணித்த போது விபத்து ஏற்பட்டு வாகனம் முழுமையாக சேதமடைந்திருந்தது. வாகன விபத்து தொடர்பாக 2018 மே மாதம் பூர்வாங்க விசாரணை | இறுதி விசாரணை இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. | குற்றப் பத்திரிக்கையை கையளித்ததும் தாமதமின்றி உரிய ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிக் குற்றப்பத்திரத்தில் குறிப்பிட்டவாறு அனுமதியின்றி வாகனத்தை பயன்படுத்தியமை, கடமையுடன் தொடற்பற்ற தரப்பினர்களை அழைத்துச் சென்றமை மற்றும் சட்டத்திற்கு முரணாக வேகமாக வாகனத்தை செலுத்தி அரச சொத்திற்கு பாரிய இழப்பு ஏற்படுத்தியமை தொடர்பாக அறிக்கையிடும் திகதி வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | வட மாகாண வைத்தியசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 26 சதவீதமான வைத்தியர்களினதும் 18 சதவீதமான தாதிய உத்தியோகத்தர்களினதும் பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்றன. | மத்திய அரசின் சுகாதார அமைச்சின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | அத்தியாவசியமான இந்த வெற்றிடங்கள் தாமதமின்றி நிரப்ப வேண்டும். |

**1.5.7 தலைப்பு 431 – நீர்ப்பாசனத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டத்தின் ஊடாக ரூபா400,280,744 கிரயத்தில் இரணைமடு குளத்திலிருந்து | ஒப்பந்ததாரரின் உரிய உத்தரவாதக் கால எல்லை (Retention Period) நிறைவடையும் வரையிலும் | ஒப்பந்ததாரரின் உத்தரவாதக் கால எல்லை உரிய விசாரணைகள் நிறைவடையும் |

| | | | |
|---|---|---|---|
| | அதிகப்படியான நீரை வெளியேற்றுவதற்காக 14 உலோக வான்கதவுகள் மற்றும் 02 மதகுகள் நிறுவப்பட்டிருந்தன.<br>மதகுகளுக்கு போதியளவு தண்ணீர் திறக்க முடியாததன் காரணமாக அவற்றின் செயற்திறனை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. ஆனால், அதனை கருத்தில் கொள்ளாமல் பணிக்கான முழுத் தொகையும் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. பின்னர், போதியளவு நீர் கொள்ளளவை பெற்ற பின்னர் கதவுகள் பரீட்சிக்கப்பட்டு, தேவையான குறைபாடுகள் சீர் செய்யப்பட்டிருந்தன.<br>ரூபா11,389,680 தொகையான சீரமைத்தல் கிரயம் ஒப்பந்ததாரரால் தாங்கிக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத் தொகையை மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி நிதியத்திற்கான செலவினமாக கொடுப்பனவு செய்வதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய நீரின் இயலளவு கிடைக்காமையால் உரிய விசாரணைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. அதன் காரணமாக இந்த பழுதுபார்த்தலை திணைக்களத்தின் ஊடாக நிறைவேற்ற நேர்ந்தது. | வரையிலும் நீடிப்பதற்கு காரணமாக அமைந்த விடயங்களை தேடிப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டத்தினூடாக ரூபா343 மில்லியன் செலவிடப்பட்டு திருவையாறு ஏற்று நீர் வழங்கல் நிர்மாணங்கள் | நீர் செல்லும் வழியின் இருபுறமுள்ள பகுதியில் உள்ள காணிகளின் உரிமையாளரிகளினால் நீர்த்தடுப்புகளை நீக்கி முறையற்ற விதத்தில் நீரினைப் பெற்றுக்கொள்ளல் இதற்கு | பணிகளை நிறைவேற்ற முன்னர் உரிய முறையில் சாத்தியவளக் கற்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

மீளமைக்கக்கப்பட்டு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

இரணைமடு குளத்திலிருந்து திருவையாறு விவசாய காணிகள் வரை நீரை திருப்புவதே இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். எனினும், இச் செயற்திட்டத்தின் ஊடாக எதிர்பர்க்கப்பட்ட அந்நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததால் மேற்கொள்ளப்பட்ட சில நிர்மாணங்களை அகற்றிவிட்டு புதிய நீர் ஒழுங்குபடுத்தல் இயந்திரத்தை (Regulator) மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் நிறுவ வேண்டியிருந்தது. சம்பந்தப்பட்ட விவசாய காணிகளிற்கு தடையின்றி நீர் வழங்க முடியுமா என்பது குறித்து சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததால் இதற்காக செலவிடப்பட்ட ரூபா1,166,350 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

காரணமாக அமைந்திருந்தது. பின்னர் அந்த நீர்த்தடுப்புக்காக இடப்பட்டிருந்த பலகையிலான கதவுகள் நீக்கப்பட்டு, உலோகத்திலான கதவுகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தற்போது இறுதி விவசாயக் காணிகள் வரையிலும் நீர் பாய்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**1.5.8 தலைப்பு 470 – உள்ளூராட்சித் திணைக்களம்**

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மன்னார் நகர சபைக்குரிய 30 கடைகளுக்கு ஏற்பட்ட தீவிபத்து நட்டத்திற்காக வட மாகாண சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு உள்ளூராட்சி திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட முற்பணத்தில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 3,584,000 மீதியில் ரூபா 304,000 மாத்திரமே மீளாய்வாண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | கடனை அறவிடும் பணிகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 02 உள்ளூராட்சி நிறுவனங்களால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா25,792,086 கூட்டுமொத்த பெறுமதியான 03 சந்தைகள், ஒரு கூட்டுப் பசளையாக்கல் நிலையம், ஒரு இயற்கை பூங்கா மற்றும் ஒரு சரணாலயம் என்பன 03 ஆண்டுகள் தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றன. | இந்த சொத்துக்களை பயன்படுத்துவதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 432 – மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.3 ஆம் வழிகாட்டலின் 31 ஆவது பிற்சேர்க்கையின் பிரகாரம், கேள்வியை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த 14 நாள் காலப்பகுதியை புறக்கணித்து வட மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் ரூபா78,530,000 தொகையான 18 வேலைத்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட கேள்வி ஆவணங்களிற்கு 7 நாட்கள் தொடக்கம் 12 நாட்கள் வரையான காலப்பகுதி மாத்திரம் கேள்வியை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்தது. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை இதற்கு காரணமாக அமைந்திருந்தது. | அரச பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.10 ஆம் வழிகாட்டல் பிரகாரம், கேள்வி செல்லுபடியாகும் காலப்பகுதி 77 நாட்களாக காணப்பட வேண்டிய ரூபா 66 மில்லியன் கூட்டுமொத்தமான 10 ஒப்பந்தங்கள், 63 நாட்களாக காணப்பட வேண்டிய ரூபா 56 மில்லியன் கூட்டுமொத்தமான | இந்த திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உள்ளக தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 18 ஒப்பந்தங்கள், 49 நாட்களாக காணப்பட வேண்டிய ரூபா 14 மில்லியன் கூட்டுமொத்தமான 12 ஒப்பந்தங்கள் போன்ற அனைத்து கேள்வி கோரலிற்கும் வட மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் யாழ்ப்பான பிரதம பொறியியலாளர் அலுவலகத்தால் கேள்வி செல்லுபடியாகும் காலப்பகுதி 42 நாட்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | ICTAD/SBD/03 ஆவணத்தின் 01 ஆம் பிரிவின் 30 ஆம் பந்தியின் பிரகாரம், விலைமனுதாரர் தெரிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 28 நாட்களுக்குள் அதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் ரூபா 20,835,000 பெறுமதியான 09 பணிகளுக்காக 48 நாட்கள் தொடக்கம் 84 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை இதற்கு காரணமாக அமைந்திருந்தது. | இணங்கிய நிபந்தனைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 1.5.10 தலைப்பு 441 – நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் கைதடி அரச முதியோர் இல்ல உணவு விநியோகம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(அ) தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கப்பட்ட விலையை விட அதிக விலையின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டில் ரூபா200,070 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.<br><br>(ஆ) இப் பெறுகையின் போது வெவ்வேறு கேள்விதாரர்களினால் ஒவ்வொரு பொருட்களிற்கும் குறைந்த விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைக் குழுவால் கேள்விதாரர்கள் சமர்ப்பித்த விலைகளின் கூட்டுமொத்தக் பெறுமதி மாத்திரம் கருத்தில் கொள்ளப்பட்டு குறைவான | இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

விலை சமர்ப்பித்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது அரச நிதிக்கு ரூபா2,655,746 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) கேள்விதாரரால் 08 பொருட்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமதிப்பீடுகள் சந்தை விலையை விட 46 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை குறைவாக காணப்பட்டது. இது ஒரு கற்பனையான சூழ்நிலை என்பதால், பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.11 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் சம்பந்தப்பட்ட கேள்விதாரரிடம் இது தொடர்பாக விளக்கம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக எதுவும் கருத்தில் கொள்ளப்படாமல் மேற்குறிப்பிட்ட விலையை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு பெறுகை வழங்கப்பட்டது.

**1.5.11 தலைப்பு 460 – கல்வித் திணைக்களம்**

----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள 12 வலயங்களில் கடமைக்கு சமூகமளித்திருக்காத 255 ஆசிரியர்களிற்கு எதிராக பதவி வறிதாக்கலிற்கு ஒழுக்காற்று நடவடிக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவின் பிரகாரம் தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத் தாமத காலப்பகுதி 1 மாதம் தொடக்கம் 6½ ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்டது. | உரிய ஆசிரியர்களுடனான தொடர்பாடல் நலிவடைந்திருந்தமை இந்த தாமதத்திற்கு காரணமாக அமைந்திருந்தது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் கடமையாற்றுகின்ற 13 ஆசிரியர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட வேண்டிய காலப்பகுதி முடிவடைந்து 4 ஆண்டுகள் தொடக்கம் 32 ஆண்டுகள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்த போதிலும், 2013 யூலை 03 ஆம் திகதிய 1817/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வட | நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | உரிய நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண அரச சேவை தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவைதாபன நடைமுறை மற்றும் ஒழுங்கு விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் IV ஆம் பிரிவிற்கு முரணாக, கைவிரல் அடையாளப் பதிவு மூலம் தினவரவு உறுதிப்படுத்தப்படாமல் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர படி மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகளாக ரூபா90,710 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வருகைப் பதிவேட்டின் பிரகாரம் வருகை உறுதி செய்யப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சட்டரீதியானது அல்ல என்பதால் மீள அறவிடல். |
| (ஈ) | 2007 திசெம்பர் 13 ஆம் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 3.4 (II) ஆம் பந்திக்கு முரணாக, 07 வலயக் கல்வி அதிகார பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற 31 ஆசிரியர்கள் 01 ஆண்டு தொடக்கம் 06 ஆண்டுகள் வரையான காலமாக அவர்களது நிரந்தர | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் தொடர்பில் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். | தற்காலிக ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | வதிவிடத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளிற்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றி வருகின்றனர். | | |
| (உ) | 2007 திசெம்பர் 13 ஆம் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 3.2 பந்திக்கு முரணாக, 12 கல்வி வலயங்களில் 490 ஆசிரியர்கள் இடமாற்றமின்றி ஒரே பாடசாலையில் 8 ஆண்டுகள் தொடக்கம் 32 ஆண்டுகள் வரையான காலமாக கடமையாற்றி வருகின்றனர். | இதற்குரிய அறிவுரைகள் உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | உரிய காலத்தில் இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஊ) | வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 10,557,045 தொகையான ஆசிரியர்களின் சம்பளத்தை மோசடியான முறையில் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவ்வாறு மோசடியாக பெறப்பட்ட ஆசிரியர்களின் சம்பளம் ரூபா11,448,400 ஆக காணப்பட்டது. | ரூபா 1.5 மில்லியன் அறவிடப்பட்டதுடன், நிலுவை மீதிக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிலுவை மீதிகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |
| (எ) | மாகாண கல்வி திணைக்களத்தின் கீழ் காணப்படும் பாடசாலைகளில் 1609 ஆசிரியர் மற்றும் 182 அதிபர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 30 பிரதி அதிபர் மேலதிகமாக காணப்பட்டனர். | இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவைக்கேட்ப வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகைப் பதவியணியை ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.12 தலைப்பு 851 – காணிக் கட்டுப்பாட்டு திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) வட மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான வவுனியா பிரதேசத்தின் காணிகளினை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் பெறப்பட்டிருக்க வேண்டிய ரூபா 13,245,047 கூட்டுமொத்தமான குத்தகை கட்டணத்தை அறவீடு செய்வதற்கு காணி ஆணையாளர் திணைக்களத்தின் 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 96/05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக் குத்தகையை அறவீடு செய்வதற்கு தாமதமாகியிருந்த காலப்பகுதி 05 ஆண்டுகள் தொடக்கம் 27 ஆண்டுகள் வரையான வீச்சில் காணப்பட்டன. | இது தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் தாமதிக்காது செயற்பட்டு நிலுவை வரியை அறவிட வேண்டும். |
| (ஆ) மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தினால் வட மாகாணத்தின் 46 கிராம சேவையாளர் பிரிவுகளில் இனங்காணப்பட்ட 3403 காணிப் பிணக்குகளில் 366 முன்னைய | அதற்காக அரசின் வேறு திணைக்களங்களை இணைத்துக்கொள்ள வேண்டியதாக உள்ளமையால் தாமதம் ஏற்பட்டுள்ளது. | இது சிக்கலான விடயம் என்பதால் அதிக முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 108 பிணக்குகள் மாத்திரமே தீர்வு செய்யப்பட்டிருந்தன. | | |
| (இ) | வதிவிட நோக்கத்திற்காக வழங்கப்பட்ட போதிலும் பின்னர் அக் காணி சுமார் 100 கடைகளுடன் வர்த்தக வளாகமாக கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2017 யூலை 04 ஆம் திகதிய 2017/01 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அக் கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தி குத்தகை வருமானத்தை சேகரிப்பதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் ஆதன உரிமையாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர்களின் 07 பேர் மாத்திரம் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சமர்ப்பித்திருந்தனர். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட்டுமு தாமதமின்றி உடன்படிக்கை கைச்சாத்திட்டு உரிய வரி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.13 தலைப்பு 853 – காணிக் கட்டுப்பாட்டு திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 04 மாகாண திணைக்களங்கள் மற்றும் 02 அமைச்சுக்களால் வாகன சேவைக்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குநர், அதே காலப்பகுதியில் ஒரே வகையான வாகனத்தை சேவைப்படுத்துவதற்கு வெவ்வேறு விலைகளை | ஒரு நிறுவனத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை மற்றுமொரு நிறுவனத்திற்கு பொருத்தமானதாக கொள்ள முடியாது. அவ்வாறே, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் | இது தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கியிருந்தார். இந்த அனைத்து நிறுவனங்களினதும் வாகனத்தை சேவிஸ் செய்தல் பெறுகை தொடர்பான அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினதும் தலைவராக வட மாகாண இயந்திரவியல் பொறியியலாளர் இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட இந்த பன்முகத்தன்மை கொண்ட விலைமனுக்கள் தொடர்பாக எந்தவொரு மதிப்பீடும் அவரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குழுக்களில் பல்வேறு அங்கத்தவர்கள் பங்குபற்றுவதால் இவ்வாறான தீர்மானம் எடுக்க நேர்ந்தது. | |

### 1.5.14 பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வட மாகாண நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வழங்கப்பட்ட துறைசார் அடைவுகள் தொடர்பான நிலைமை அறிக்கையில் (Status Report on Sectorial Achievement) அறிக்கையிட்டவாறு வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் முன்னுரிமையளிக்கப்பட்ட பின்வரும் வேலைத்திட்டங்கள் நாளதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) மாகாணங்களுக்கிடையிலான ஆசன முன்பதிவு முறைமையை அமுல்படுத்துதல். | கொவிட் தொற்றுநோய் நிலைமை அடிப்படையில் தேவையான ஊழியர்களை ஆட்சேர்க்கப்படாமையால் (i) மற்றும் (iii) நோக்கங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. தேவையான சட்டங்களை உருவாக்குவதற்கு முடியாமையால் (ii) ஆம் விடயத்தினை நிறைவேற்ற முடியாதிருந்தது. | நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட இந்த இலக்குகளை தாமதமின்றி அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ii) பாடசாலை போக்குவரத்து சேவை மற்றும் முச்சக்கர வண்டி சேவைகளை முறைமைப்படுத்தக்கூடிய நடைமுறைகளை உருவாக்குதல்.

(iii) வட மாகாண பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களை கண்காணிக்கும் முறைமையை (GPS System) நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டம்.